# தாளக்காவடி அண்ணாவியார் மயில்வாகனம்

தமிழர்களின் மிகவும் பழமைவாய்ந்த பாரம்பரிய கலைவடிவமான தாளக்காவடி முன்னர் மேடைகளிலும் கோயில்களிலும் ஆடப்பட்டுவந்தன. நாதஸ்வரம், நடனம் போல் தாளக்காவடியும் தமிழர் விழாக்களில் ஆரம்பத்தில் இடம் பெறும் நிகழ்ச்சியாக இருந்து வந்துள்ளது. ஆயினும் காலப்போக்கில் மேடையில் ஆடப்படுவது அருகி இன்று கோயில்களில் மட்டும் ஆடப்படும் கலை வடிவமாக தாளக்காவடி உள்ளது.

ஈழத்தில் இன்று தாளக்காவடியை முறைப்படி பயிற்றுவித்துவரும் அண்ணாவியார்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். அவர்களில், அண்ணாவியார் முருகேசு மயில்வாகனம் மிகவும் முக்கியமானவர். அவர் வேலையின் நிமித்தம் எங்கெல்லாம் செல்ல நேரிடுகிறதோ அங்கெல்லாம் சிறார்களைச் சேர்த்து தாளக் காவடி பயிற்சி அளித்து அக்கலையை அழியாது பாதுகாத்து வருகிறார்.

காரைநகர் விக்காவில் என்ற கிராமத்தைச் சேர்ந்த மயில்வாகனம் அவர்கள் ஆனி 05, 1940ல் பிறந்தவர். இலகடி இந்துக் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் காரைநகர் இந்துக்கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றவர். தீவுப்பகுதிகளில் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் விற்பனையாளராக, எழுதுவிணைஞராக, முகாமையாளராக உயர்ந்து இறுதியில் மேற்பார்வையாளராக 2000 ஆண்டில் இளைப் பாறினார்.

பெரிய தந்தையார் ஆயுர்வேத வைத்தியர் அண்ணாவியார் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையிடம் முறைப்படி ஆட்ட வகைகளை இவர் பயின்றார். இவர்களது பரம்பரையினர் சிறந்த பாம்புகடி வைத்தியர்களாக விளங்கியுள்ளனர். சிறுவயதிலேயே ஆட்டங்களில் ஆர்வமும் திறமையும் மிக்க மயில்வாகனம் அவர்கள் காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையினர் நடாத்திய போட்டிகளில் பங்கு கொண்டு தொடர்ந்து 9 வருடங்களாக முதற் பரிசினைப் பெற்றார். காவடி ஆட்டம், மயில் நடனம், சிவநடனம், கும்பி, கோலாட்டம், கமுகம் என்று அனைத்துக் கிராமியக் கலைகளிலும் இவர் சிறந்து விளங்கினார்.

1972ல் சிவசக்தி நடனக்குழுவை உருவாக்கி அதன் மூலம் எண்ணற்ற சிறார்களுக்கு இந்த கிராமியக் கலைகளைக் கற்பித்து வருகிறார். தனது தந்தையார் 3 ரூபாவுக்கு ஒரு தாளத்தை வாங்கித்தந்து தனது கலையை ஊக்குவித்ததாகக் குறிப்பிடும் மயில்வாகனம் அவர்களுடனான உரையாடல் கிராமியக் கலைகள் குறிப்பாக காவடி பற்றிய பல தகவல்களைத் தந்தன.

அகத்திய மாமுனிவர் கைலாசத்திலிருந்த சிவகிரி மலையையும் சக்திகிரி மலையையும் தூக்கிவருமாறு இடும்பனிடம் கட்டளையிடுகிறார். இவ்வாறு இடும்பன் தூக்க முயலும் போது முருகப் பெருமான் இளைஞனாகத் தோன்றி அந்த மலைகள் தனக்குச் சொந்தமானவை என்று சொல்ல இருவருக்கும் சண்டை மூளுகிறது. முடிவில் தோல்வி கண்ட இடும்பன் இளைஞனாக வந்தது முருகப் பெருமான் என்பதை அறிந்து கொள்கிறார்.

அன்றிலிருந்து முருகனுக்குரிய இவ்விரு மலைகளைக் குறிக்கும் முகமாக மரக்கிளைகளை ஒரு தடியின் இரு முனைகளில் சுமந்தவாறு இடும்பன் முருகனின் கோயில்களுக்குச் சென்று வழிபட்டுப் பிராயச்சித்தம் தேடினான். இந்தக் காவு தடியே பின்னாளில் காவடியாக மருவியது. பின்னர், மரக்கிளைகளுக்குப் பதிலாக மயிலிறகுகளால் காவடி அலங்கரிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. இந்தக் கதையின் பின்னணியில் தான் இன்றும் முருக பக்தர்கள் பழநி, திருச்செந்தூர், நல்லூர், கதிர்காமம் போன்ற புகழ்பெற்ற முருகன் ஆலயங்களில் காவடி ஆட்டத்தை சிறப்பாகச் ஆற்றுகை செய்து வருகின்றனர்.

காவடிகளில் பால் காவடி, பன்னீர்க் காவடி, சந்தனக் காவரடி, கற்பூரக் காவடி, புஷ்பக் காவடி, தீர்த்தக் காவடி, தேர்க் காவடி, சேவற் காவடி, செதில் காவடி, தூக்குக் காவடி, பறவைக் காவடி என்று பலவகைக் காவடிகள் உள்ளன. எல்லாக் காவடிகளுக்கும் ஆடும் முறையிலும் தயாரிப்பு வேலையிலும் விதிமுறைகள் இருக்கின்றன. உதாரணமாக செதில் காவடியில் 108 அல்லது 508 அல்லது 1008 செதில்கள் ஆடுபவரின் உடலில் குத்தப்படலாம். ஆடுபவரின் பின்னால் செதில் பிடிப்பவரின் கையில் தான் ஆட்ட வடிவம் தங்கியுள்ளது. கரு ஆடல், சுழன்று ஆடல், சோடி போட்டு ஆடல் என்று ஆட்ட வடிவங்கள் வேறுபடும்.



இவ்வாறு காவடியின் தொன்மைகளை முழுமையாக அறிந்து பயிற்றுவித்து வரும் மயில்வாகனம் அவர்கள் பிள்ளையார் நடனம், சிவ நடனம், முருகன் நடனம், வைரவர் நடனம், கும்மி நடனம், கப்பல் நடனம், ஊரி நடனம், பாம்பு நடனம், மயில் நடனம், குதிரை நடனம் போன்ற அனைத்துக் கிராமிய நடனங்களிலும் பாண்டித்தியம் பெற்றவர்.

இவரதும் இவர் குழுவினரதும் காவடி ஆட்டங்களும் மேலும் கிராமிய நடனங்களும் தீவுப்பகுதிகள் மட்டுமல்லாது கொழும்பு, நொச்சியாகம, அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பல கோயில்களிலும் இடம் பெற்றுள்ளன. 1979ல் யாழ் செயலகத்திலும், கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் கலை கலாச்சார அமைச்சர் E.L. குருளே முன்னிலையில் நிகழ்ச்சிகளை நடத்தி இவர் பாராட்டைப் பெற்றார்.

ஒருமுறை இவர் வவுனியா குருக்கள் மடத்து முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவுக்கு மேளம், கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு மற்றும் காவடி கலைஞர்களை அழைத்துச் சென்றிருந்தார். அங்கு வேறு இடத்தைச் சேர்ந்த ஒருவரும் கரகம் ஆட வந்திருந்தார். வந்தவர் தன்னுடன் போட்டிக்குக் காவடி ஆட முடியுமா என்று மயில்வாகனம் அவர்களிடம் ஒலி வாங்கி மூலம் சவால்விட்டார். மேளகாரர் வீரச்சாமியிடம் நடையை நாலாம் காலத்தில் வாசிக்கச் சொல்லிவிட்டு மேடையில் காவடியைத் தலையில் வைத்தபடி மயில்வாகனம் ஆடத்தொடங்கினார். அவரது ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கரகம் ஒருபக்கமும் கரகாட்டக்காரர் மறுபக்கமுமாக மேடையில் விழுந்து போனதை தன் வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாகக் குறிப்பிடுகிறார்.

## ஈழத்து முத்துக்கள் 119

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

காவடிச் சிந்துக்களிலும், தாளக்கட்டுகளிலும், காவடி கட்டுமுறைகளிலும் நுண்ணார்ந்த அறிவு கொண்ட அண்ணாவியார் மயில்வாகனம் அவர்களை தன்னுடன் இந்தக் கலைகள் அழிந்துவிடாதிருக்க பல்வேறு இடங்களுக்குச் சென்று அவற்றைப் பயிற்றுவித்து வருகிறார்.

இவ்வாறு தொன்மைமிக்க எமது கிராமியக் கலைகளை அழியாது காத்துவரும் அண்ணாவியார் முருகேசு மயில்வாகனம் அவர்களுக்கு அவரது கலைச்சேவையைப் பாராட்டி பல விருதுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

. 1978ல் புங்குத்தீவு கண்ணகை அம்மன் தேவஸ்தானம் வழங்கிய 'நடனக் கலைஞர்'

. 1998ல் அனலைதீவில் 36 சிறார்களுக்குக் கிராமியக் கலைகள் பழக்கிய நிறைவு விழாவில் 'கலைமாமணி'.

. 1998ல் சங்கானை கலாச்சார சபை சார்பில் வீரமணி ஐயரால் சூட்டப்பட்ட 'தாலயஞான பூபதி'.

. 2002ல் ஊர்காவற்துறை கலாச்சாரசபையால் வழங்கப்பட்ட 'கலாஞான வித்தகர்'

. 2003ல் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரதீஸ்வர் ஆலயத்தினர் வழங்கிய 'கலைஞானத் தொண்டன்',

. 2005ல் காரைநகர் கலாச்சார சபையினர் அளித்த 'கலைஞான சுரபி', 2010ல் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவில் யாழ் மாவட்டத்தின் சிறந்த கலைஞருக்கான ஆளுநர் விருது,

. 2010ல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் பெருவிழாவில் 'கலைஞானச் சுடர்' போன்ற பல பட்டங்கள் கிடைத்துள்ளதுடன் பல கௌரவிப்பு நிகழ்வுகளும் நடந்துள்ளன.

ஈழத்தில் அருகிவரும் எமது பாரம்பரிய கிராமியக் கலைகளைக் கட்டிக் காப்பதில் அரிய பணிகளை ஆற்றிவரும் அண்ணாவியார் முருகேசு மயில்வாகனம் நீடு வாழ்ந்து கலைத் தொண்டாற்றத் தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com


## உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**